1996 பிப்ரவரி 23]

*30-6-95*ல் தள்ளுபடி செய்யப்பட்டுத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி கோவிலைத் தனியார் வசம் ஒப்பளிக்க இயலாது. மேலும் மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போல எந்தக் குறைபாடும் இல்லை. மிகச் சிறப்பாக அனைத்து விழாக்களும் நடந்து வருகின்றன என்று கூறிக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *120*, டாக்டர் மு. சீனியம்மாள், மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்.

120--

ஆலயங்களுக்கு பூஜைக்கு நிதியுதவி

***35668--டாக்டர் மு. சீனியம்மாள்:**

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

அவினாசி தொகுதி, தேவம்பாளையம் அண்ணன்மார் சுவாமி ஆலயம், பச்சாம்பாளையம் பட்டத்து அரசி அம்மன் ஆலயம், ஆயிக்கவுண்டன்பாளையம் அண்ணன்மார் சுவாமி ஆலயம், ராஜன் நகர் பெருமாள் ஆலயம், அவினாசிலிங்கம்பாளையம் பட்டத்து அரசி அம்மன் ஆலயம் ஆகிய ஆதிதிராவிடர் காலனி ஆலயங்களுக்கு ஒரு கால பூஜை நிதி உதவி வழங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் மு. அம்மமுத்துபிள்ளை, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இந்து சமய அறநிலையத்துறை ஆளுகையின்கீழ் இல்லாத திருக்கோவில்களுக்கு ஒரு கால பூஜை நிதியுதவி வழங்குவது இல்லை என துறை ரீதியில் முடிவெடுக்கப்பட்டுள்ளது. எனவே வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள இந்து சமய அறநிலையத்துறையின் ஆளுகையின்கீழ் இல்லாத இத்திருக்கோவில்களுக்கு ஒரு கால பூஜைத் திட்டத்தின்கீழ் நிதியுதவி வழங்க இயலாது.

முற்பகல் 11-30

டாக்டர் மு. சீனியம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இருள்சூழ்ந்த, பாழடைந்த எண்ணற்ற கோவில்களுக்கு விளக்கேற்றி வைத்து, ஒருகால பூஜைக்கு வழிவகுத்த மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய காலம்தான் இந்து அறநிலையத்துறையினுடைய பொற்காலம் என்று போற்றப்படுகின்ற

இந்த நல்லாட்சியில், கொங்குமண்டலத்தில் பல வரலாற்றுச் சம்பவங்களுக்குப் பெயர்போன புண்ணிய பூமியாக விளங்குகின்ற அவினாசி தொகுதியில் தேவம்பாளையம், பச்சாம்பாளையம், ஆயிக்கவுண்டன்பாளையம், ராஜன் நகர், அவினாசிலிங்கம்பாளையம் ஆகிய ஆதிதிராவிட காலனிகளை இந்து அறநிலையத்துறை சார்பாக எடுத்து, அவற்றுக்கு நிதியுதவி வழங்கப்படுமா என்று கேட்பதோடு, இந்தப் புனித புண்ணியவதியினுடைய ஆட்சியில் எத்தனைக் கோவில்கள் ஒருகால பூஜையினால் பயன்பெறுகின்றன என்பதை அமைச்சர் வாயிலாக அறிய விரும்புகிறேன். மேலும் ஆதிதிராவிட மக்களால் பராமரிக்க முடியாத, இந்த அறநிலையத்துறைக்கு உட்படாத கோவில்கள் எல்லாவற்றையும் அரசே எடுத்து அவற்றுக்கு உதவித் தொகை வழங்குவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவினாசி தொகுதி, தேவம்பாளையம் அருள்மிகு அண்ணன்மார் சுவாமி ஆலயம், பச்சாம்பாளையம் அருள்மிகு பட்டத்து அரசி அம்மன் ஆலயம், ஆயிக்கவுண்டன்பாளையம் அருள்மிகு அண்ணன்மார் சுவாமி ஆலயம், ராஜன் நகர் அருள்மிகு பெருமாள் ஆலயம், அவினாசிலிங்கம் அருள்மிகு பட்டத்துஅரசி ஆலயம் ஆகிய மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஆதி திராவிடப்பகுதிகளில் அமைந்துள்ள ஆலயங்களை அரசு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று அவர்கள் விண்ணப்பித்தால், அரசே அதை எடுத்து, வேண்டிய நிதி உதவிகளைச் செய்து, திருப்பணிகளைச் செய்யும் என்பதையும் இந்த நேரத்தில் கூறிக்கொள்கிறேன். அதுபோல, பெருமாள் ஆலயம் என்ற ஆலயம் பற்றியும் குறிப்பிட்டார்கள். அப்படி ஒரு ஆலயம் அந்த இடத்தில் இல்லை. மேலும் ஒரு கால பூஜைத் திட்டத்தின்கீழ் தமிழகத்தில் இதுவரை 7,170 திருக்கோவில்கள் பயன்பெற்றுள்ளன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

114--

ஊராட்சி ஒன்றியத்தில் இணைக்கும் திட்டம்

***38121--திருமதி ஆர். சாவித்திரி அம்மாள்:**

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--